# இறைவனைத் தேடி…….

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்  (திருக்குறள் 2)**

தூய அறிவு வடிவமான இறைவனின் நன்மை தரும் திருவடிகளைத்
தொழாதவர் என்றால், அவர் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை.

படிக்க இயலாத ஏழ்மையான மக்கள் முதல், படித்த மேதைகள் வரை அனைவரிலும்…..
கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் அனைவரும்,……
எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு கடவுள் உண்டு என்பதும் அவரை வணங்கவேண்டும் என்பதும் பொதுவாக உணர்ந்துகொண்ட கருத்து. இதற்கும் மேலாக நாம் இந்த உலகத்தைவிட்டு பிரிந்தபிறகு இன்னுமொரு வாழ்க்கை இருக்கிறது என்பதையும் அதற்கு நமது ஆத்துமாவைக் காத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் உணர்கிறோம்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.  (திருக்குறள் 247)**

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகிலே இன்பமான வாழ்க்கை இல்லாததுபோலவே,
அருள் இல்லாதவர்களுக்கு மேலுலகத்து வாழ்வும் இல்லை யாகும்.

இந்த கடவுளின் அருளைப்பெற்று, பாவத்தைப்போக்கி, புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ள எண்ணிமுடியாத காரியங்களை நாம் பாரம்பரியமாகவோ, சடங்காசாரமாகவோ, மரியாதைக்குரிய காரியமாகவோ, கடமைக்காகவோ, பயத்துக்காகவோ…..இன்னும் பல காரணத்தினாலோ செய்கிறோம். பெரும்பாலானோர் இந்த காரியங்களை செய்வதற்கு எடுத்துக்கொள்கிற நேரத்தையும் பிரயாசத்தையும் ஒப்பிடும்போது, அந்த கடவுள் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை வாசித்து சிந்திப்பதற்கு கொடுக்கிற நேரமும் பிரயாசமும் மிகக்குறைவு. (பலபேர்கள் கடவுள் வார்த்தைகளை படிக்கவோ அறியவோ முயற்சிப்பதேயில்லை.)

படித்தவர்கள் சரியானமுறையில் கடவுளை அறிந்து, அவரைத் தொழுதுகொள்ளும்போது…..
அவர்கள்மூலம் படிக்காதவர்களும் சரியாக கடவுளை அறிந்துகொள்வார்கள்.
அப்பொழுது படித்தவர்கள் கற்றதனால் வரும் பயன் முழுநிறைவை அடைகிறது.
(நாம் முதலில் வாசித்த திருக்குறள்-2ஐ மீண்டுமாக வாசித்து சிந்தியுங்கள்.)

மனிதனைப் படைத்த கடவுள், மனிதன் இந்த உலகில் சந்தோஷத்தோடு வாழ்ந்து, தன்னோடு ஐக்கியமாக வாழ்ந்து, முடிவில் தன்னையே சேர்வதற்கு, கடவுளே வழியை ஏற்படுத்தியபோது…..
*அதை மனிதன் பின்பற்றாமல் பாவத்தில் வீழ்ந்தான்.*
அப்படி வீழ்ந்த மனுக்குலத்தை மீண்டுமாக தன்னிடத்தில் ஒப்புரவாக்கிக்கொள்ள, கடவுளிடம் பக்தியுள்ள, கடவுளுக்குப் பிரியமான பக்தர்கள் மூலமாக தன் வழியை மனுக்குலத்துக்கு தெரியப்படுத்தி, அவர்களை மீண்டுமாக தன்னிடத்தில் சேர்த்துக்கொள்ள பிரியப்பட்டார்.
*அதையும் மனிதன் முழுமையாக பின்பற்றமுடியாமல், பாவத்திலிருந்து மீளமுடியாமல் இருந்தான்.*
**இந்த விவரங்களை நீங்கள் விளக்கமாக வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் அறியலாம்.**

மனிதகுலத்தை அப்படியே விட்டுவிட பிரியமில்லாத கடவுள்…….
தானே மனிதரூபத்திலேயே இந்த உலகிற்கு வந்து,
தானே மனுக்குலத்தின் அனைத்துப் பாவங்களையும் சுமந்து தீர்த்து….,
”இப்படி நானே வந்து உங்களுக்காகச் செய்ததை நீங்கள் உங்கள் இருதயத்திலே
நம்பி (விசுவாசித்து) என்னை ஏற்றுக்கொண்டு, என்னைப்பின்பற்றினால்,
நானே உங்களுடைய மிகுதியான நாட்களை இவ்வுலகத்தில் வழிநடத்தி,
அவ்வுலகத்திற்கும் அழைத்துச் செல்ல உங்கள் ஆத்துமாவை காத்துக்கொள்வேன்”
என்ற ஒரு புதிய வழியை மனுக்குலத்திற்கு இறைவனே ஏற்படுத்தினார்.
**இந்த விவரங்களை நீங்கள் விளக்கமாக வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் அறியலாம்.**

இவ்வுலகத்தில் பிறந்த எந்த மனிதனும், எந்த மனிதனுக்கும் இவ்வுலக பாவத்திலிருந்து மீட்க வழிகாட்டவோ, ஆத்துமாவை அவ்வுலகத்திற்கு கொண்டுசெல்லவோ முடியாது என்பதை இந்த உலக வாழ்க்கையின் சரித்திரம் ஆதிமுதல் தெளிவாக விளக்குகிறது.

ஒரே வழி கடவுளே நேரடியாக அதை செய்வதுதான்….. அப்படியே கடவுள்,
மனிதரூபத்தில் இயேசுகிறிஸ்து மூலமாக, நம்மிடத்தில் வந்து, செய்துமுடித்தார்.

மரியாளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது.
அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக;
ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: மத்தேயு 1:20-21)
அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்,
தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,
தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.
அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம்,
அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: பிலிப்பியர் 2:6-8)
சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,
கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,
பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் கிறிஸ்து மூலமாய் தமக்கு
ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: கொலோசெயர் 1:19-20)

எந்த மனிதனுக்கும் தனிப்பட்ட முறையிலே தேவனிடம் உள்ள உறவு சரியாக அமைந்திருக்குமானால், அதிலே வரும் சமாதானத்தை வேறு எதற்கும் ஒப்பிடமுடியாது.
அப்படிப்பட்ட வாழ்க்கையில்…..இந்த உலகத்தின்…..

சூழ்நிலைகள், பாடுகள், ஏக்கங்கள், துன்பங்கள் எதுவும் நம்மை பாதிக்காது.

ஆசைகள், சந்தோஷங்கள், பெருமைகள், வசதிகள் எதுவும் நம்மை ஆட்கொள்ளாது.

இப்படிப்பட்ட உறவை தேவனோடு ஏற்படுத்திக்கொள்ளத்தான், அந்த காலத்திலே இந்தியாவிலே பலர் காடுகளிலும், மலைகளிலும் வாஞ்சையோடு இறைவனைத் தேடினார்கள் என்று எனக்கு எண்ணத்தோன்றுகிறது.

இறைவன், அப்படிப்பட்ட உறவை நமக்குக் கொடுத்து, அதன்மூலம் நம்மை தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ள பிரியப்பட்டு, ஒரு புதிய ஏற்பாட்டை மனுக்குலத்திற்கு ஏற்படுத்தினார்.
இப்படி நாம் தேடுகிற இறைவன், நம்மை தேடி வந்ததை அறிந்து,……

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (திருக்குறள் 2)
"தூய அறிவு வடிவமான இறைவனின் நன்மை தரும் திருவடிகளைத்
தொழாதவர் என்றால், அவர் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை."

என்ற வள்ளுவரின் வாக்கை,
**அந்த இறைவன் நமக்காக மனிதரூபத்தில் பிறந்த இந்த கிறிஸ்மஸ் நன்னாளில்,**
நினைவுகூர்ந்து, சிந்தித்து, செயல்படுவோமாக.
இறைவன் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். (வேதாகமம்: புதிய ஏற்பாடு: (2 பேதுரு 1:11)

**இனிய கிறிஸ்மஸ் வாழ்த்துக்களுடன்,**
M.Kalyanam
www.kalyanam.ca

---